IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.156/2012
Deposition of witness for DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வீரவாகு | Caste | : | |
| Father Name | : | ரத்தினம் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02nd day of December, 2025.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

1. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ள என்னுடைய முகவரியில் நான் எவ்வளவு ஆண்டுகள் அந்த கிராமத்தில் குடியிருக்கிறேன் என்று சொன்னால் 25 ஆண்டுகளா குடியிருக்கிறேன். 2013–ல் நான் குடியிருக்கும் வீட்டை கட்டினேன். தாவா சொத்தின் முன்னாள் மற்றும் தற்போதைய உரிமையாளர்கள் யார் என்று எனக்கு தெரியும். எனக்கு எழுத, படிக்க தெரியும். ஆங்கிலம் எழுத, படிக்க தெரியாது. ஆங்கிலத்தில் பெயர் எல்லாம் எழுத்துக் கூட்டி படிக்க தெரியும். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் மற்றும் என்னுடைய முதல் விசாரணையில் ஆங்கிலத்தில் தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்தின் என்னுடைய மனை எண்(Plot).8 ஆகும். அதில் தான் நான் வீடு கட்டியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதனுடைய செக்குபந்தி விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தெற்கு பக்கம் மகிமைதாஸ் மற்றும் தான் இருந்தார். மற்றவர்கள் இல்லை. பி.வா.சா.1ல் மேற்கு பக்கம் 77/1 என்ற சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது. 77/1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது மனை எண்ணா, சர்வே எண்ணா என்றால் எனக்கு தெரியவில்லை.

3. தங்கராஜ் எனக்கு தாவா சொத்தில் உள்ள மனை எண்.8–ஐ அவருடைய சொத்து என்று சொல்லி தான் விற்றார். தங்கராஜ்ஜிற்கு உரிமையான நிலம் என்பதற்கான ஆவணம் ஏதேனும் என்னிடம் காண்பித்தாரா என்றால் இல்லை. அது சம்பந்தமான ஆவணம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் இல்லை. மனை எண் 8–ன் சர்வே எண்.77/2 ஆகும். அதன் மொத்த விஸ்தீரனம் 78 சென்ட் ஆகும். 78 சென்டுக்கும் மொத்தமாக மனை பிரிவு போடப்பட்டதா என்றால் ஆமாம். மேற்படி மனை பிரிவு போடப்பட்டதற்கு உண்டான அனுமதி சான்று மற்றும் வரைபடம் என்னிடம் உள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வரைபடத்தை தாக்கல் செய்தால் அதன் உண்மையான விவரம் நீதிமன்றத்திற்கு தெரிய வரும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. வரைபடத்திற்கு யார் அனுமதி அளித்தது மற்றும் அதன் உரிமையாளர் கையெழுத்தை அந்த வரைபடத்தில் நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. மேற்படி கையொப்பம் இல்லாத ஒரு வரைபடத்தை தான் தங்கராஜ் என்னிடம் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். அந்த வரைபடத்தில் உள்ள 8–ஆம் நம்பர் மனை பிரிவை நான் எதையும் சரிபார்க்காமல் வாங்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வில்லங்க சான்றை சரிபார்த்து தான் என்னுடைய மனைப்பிரிவை வாங்கினேன் என்று சொன்னால் சரிதான். வில்லங்க சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

5. நான் வில்லங்க சான்றிதழை 30.06.2025 அன்று தான் வாங்கியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தாவா சொத்தை அதாவது 8–ஆம் நம்பர் மனை பிரிவை வாங்கும் போது சரிபார்த்து

வாங்காமல் வாங்கிய பிறகு தற்போது தான் வில்லங்க சான்றிதழை வாங்கி பார்த்தேன் என்றால் வங்கியில் கடன் பெறும் போது வில்லங்க சான்றிதழை பார்த்தேன். நான் 2007–ல் லோன் வாங்கினேன். நான் 2007–ல் லோன் வாங்கியதால் அப்போது உள்ள வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்யாமல் தற்போது 2025–ல் பெற்ற வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளதால் நான் லோன் பெறும் போது வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. லோன் வாங்கிய வங்கிக்கு வாதியானவர்கள் என் மீது வங்கியில் புகார் அளித்ததின் பேரில் வங்கியானது லோனை இரத்து செய்து உடனடியாக கட்டுமாறு எனக்கு அறிவிப்பு அனுப்பினார்கள் என்று சொன்னால் அவ்வாறு சொன்னார்கள் ஆனால் அவ்வாறு லோனை இரத்து செய்யவில்லை. அதன் பிறகு தான் நான் லோனை அடைத்து கேன்சல் செய்த ஆவணத்தை பதிவு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் லோன் வாங்குவதற்கு வில்லங்கத்தை மறைத்ததின் பேரில் தான் எனக்கு அவ்வாறு அறிவிப்பு அனுப்பப்பட்டு இரத்து செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மனைப்பிரிவில் எத்தனை மனை பிரிக்கப்பட்டது என்று சொன்னால் 12 மனை பிரிக்கப்பட்டது. மொத்தமாக 66 சென்டுக்கு தான் மனைப்பிரிவி போடப்பட்டது என்றாலும் 78 சென்டுக்கு போடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. தங்கராஜிடமிருந்து அதாவது எனக்கு சொத்தை விற்பனை செய்தவரிடமிருந்து தெய்வநாயகம் அதாவது வாதியானவர் 56 சென்ட் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதாவது தங்கராஜிடமிருந்து தெய்வநாயகம் 56 சென்டை வாங்கிய பிறகு தெரிந்தே நான் தங்கராஜிடமிருந்து என்னுடைய 8 ஆம் மனைப்பிரிவை வாங்கியது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தான சர்வே

எண்.77/2 நான் மனையை வாங்குவதற்கு முன்பு பட்டா யார் பெயரில் உள்ளது என்று சரிபார்த்து வாங்கினேனா என்றால் யார் பெயரில் உள்ளது என்று அப்போது எனக்கு தெரியாது. சர்வே எண்.77/2–ல் இருக்கக் கூடிய மொத்த விஸ்தீரனமான 76 செண்ட் வாதி பெயரில் பட்டா இருந்தது தெரிந்தே நான் தங்கராஜ் உடன் சேர்ந்து என் மனைப்பிரிவை வேண்டுமேன்றே வாங்கினேன் என்றால் சரியல்ல.

8. பி.வா.சா.1ல் நான் சொத்தை வாங்கிய ஆவணத்தில் சொத்தானது பூர்வீக சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதில் தங்கராஜிற்கு எப்படி பாகம் வந்தது போன்ற விவரங்கள் இல்லை என்று சொன்னால் இல்லை. தங்கராஜ் மற்றும் அவரது குடுமபத்திற்கு எப்படி பாகம் வந்தது போன்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு அருகில் உள்ள சர்வே எண்.77/1 ஆனது தங்கராஜின் குடும்பத்திற்கு சொந்தமான சொத்து என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தற்போது அந்த சொத்தை யார் எல்லாம் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9. நான் மனை வாங்குவதற்கு முன்பு தெய்வநாயகம் 2 பேருக்கு மனையை விற்பனை செய்துள்ளார் என்று சொன்னால் அப்போது எனக்கு தெரியாது. அதன் பிறகு தான் தெரியும். நான் பதிலுரையில் சொல்லாத விவரங்களை என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் அப்போது எனக்கு ஒரு சில விஷயங்கள் தெரியாது அதன் பிறகு சொல்லியுள்ளேன். என் மீது ஏற்கனவே வாதி உறுத்துக்கட்டளை வழக்கை அ.வ.எண்.640/2003 தாக்கல் செய்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. உறுத்துக்கட்டளை தீர்ப்பு வழங்கிய மூன்று வருடங்கள் கழித்து தான் எனக்கு தெரிந்தது. மேற்படி உறுத்துக்கட்டளை

தீர்ப்பு தெரிந்த பிறகு தான் நான் எனது வீட்டை கட்டினேன் என்று சொன்னால் சரியல்ல.

10. நான் ஏந்கனவே 2013–ல் வீடு கட்டியுள்ளதாக இன்றைய குறுக்கு விசாரணயின் முற்பகுதியில் குறிப்பி்டுள்ள நிலையில் தற்போது 2006 ல் வீடு கட்டியதாக குறிப்பிடுவது முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்று சொன்னால் 2006–லேயே நான் வீடு கட்டி மின் இணைப்பு பெற்றுவிட்டேன். வீடு கட்டும் போது வாதி என்னிடம் தகராறு செய்ததில் நான் எனக்கு விற்பனை செய்த தங்கராஜின் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்ததின் பேரில் வாதியையும், என்னையும், தங்கராஜையும் கூப்பிட்டு விசாரணை செய்தார்கள். அப்போது உறுத்துக்கட்டளை விவரம் எனக்கு தெரிவித்த நிலையில் அதை மறைத்து நான் வீடு கட்டினேன் என்று சொன்னால் சரியல்ல.

11. போலீஸ் விசாரணையில் வாதி 56 சென்ட் வாங்கியதாக குறிப்பிட்டு ஆவணத்தை காண்பித்தார் என்று சொன்னால் எனக்கு விற்பனை செய்த தங்கராஜ் 56 சென்ட் போக மீதம் தான் உனக்கு விற்பனை செய்தேன் என்று குறிப்பிட்டார். என்னுடைய பதிலுரையில் 22 சென்ட் கூடுதலாக இருந்தது என்பது பற்றி நான் சொல்லவில்லை என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)

INBARANI Digitally signed by INBARANI

DISTRICT MUNSIF
KATPADI